REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 25உ வெள்ளி (10—12—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 26உ சனி (11—12—54) [இதழ் 154

## தட்சிணாமூர்த்தி ஐயர் கைது

மதுரை சம்பவ எதிரொலி

மதுரைப் போலீசார், ஆர். எஸ். எஸ். தலைவரும் மதுரை வழக்கறிஞருமான தட்சிணாமூர்த்தி ஐயரையும், மற்றும் மூவரையும் கைது செய்துள்ளனர். இம்மாதம் இரண்டாம் தேதி மதுரையில் நடைபெற்ற இராமாயண நாடகத்தினை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சிகள் சம்பந்தமாக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது.

இதுவரை இச்சம்பவம் பற்றி மதுரை போலீசார் 35 பேர்களைக் கைது செய்துள்ளனர். தட்சிணாமூர்த்தி ஐயர் பின்னர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்.

# பணமுட்டைகளுக்குச் சாதகமான வரி விதிப்பு சிபாரிசு

## குடிமக்களை மேலும் சுரண்ட மறைமுக வரிகளை உயர்த்த வேண்டுமாம்

### வரி விசாரணைக் குழுவின் வானரநீதி

வரி விதிப்பு ஆய்வுக் குழு குறிப்பிட்டுள்ள சிபாரிசுகளை இந்தியப் பேரரசு நடைமுறைக்குக் கொண்டுவருமானால், இப்பொழுது கிடைத்துவருகிற வரி வருமானத்தைவிட ரூ. 120 கோடியிலிருந்து, ரூ. 130 கோடி வரையில் கூடுதலாகக் கிடைக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

இத்தொகையில் ரூபாய் 70 கோடி முதல், ரூ. 79 கோடி வரை மத்திய அரசாங்கத்திற்கும் மீதமுள்ள தொகை மாநில அரசாங்கங்களுக்கும் உட்பகுதி ஆட்சி மன்றங்களுக்கும் வருமானப் பெருக்கம் ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியப் பேரரசின் வரி விதிப்புக் கோட்பாட்டைப் பொறுத்தவரையில், நேரடி வரி விதிப்பை விலக்கி, மறைமுக வரி விதிப்பை மேற்கொள்ளுமாறு, விசாரணைக் குழு சிபார்சு இருக்கிறது. அதாவது, நேரடி வரிகளான வருமான வரி, சூபர் வரி, கார்ப்பொரேஷன் வரி ஆகிய வரிகளை மேலும் உயர்த்தக் கூடாது என்றும், இப்பொழுது விதிக்கப்பட்டுள்ள அளவே கூடுதலாக இருக்கின்றது என்றும், மேற்படி குழு கருதுகிறது.

சாதாரண பொதுமக்களிடத்திலிருந்து மறைமுகமாக வசூலிக்கப்படுகிற சுங்க வரி, கலால் வரிகளை மேலும் உயர்த்துவதே வருமானப் பெருக்கத்திற்கு வழியாகும் என குழு யோசனை கூறியிருக்கிறது.

மாநிலங்களைப் பொறுத்தவரையில், ஏற்கனவே மத்திய அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட விற்பனை வரி, காட்சி வரி, நலன் கூட்டும் வரி ஆகியவைகளையே விசாரணைக் குழுவும் ஒப்பியுள்ளது. விவசாய வருமான வரியையும், நிலவரியை சீர்திருத்தி அமைப்பதையும் மேற்படி குழு குறிப்பிட்டிருக்கிறது.

இந்தியப் பேரரசின் வரவு செலவு திட்டத்தை வெளியிட வேண்டிய நாளான பிப்ரவரி கடைசி நாளில், விசாரணைக் குழுவின் முழு அறிக்கையும், ஏககாலத்தில் வெளிடப் பெறலாம் என நம்பப்படுகிறது.

## சென்னை நாடகச் சட்டம் சுயநலக் கும்பலுக்கே பாதுகாப்பளிக்கும்!

### 'ஆபாசங்கள் எவை, ஆட்சேபணைக்குரியவை எவை என்ற வரையறை எங்கே?'

'டைம்ஸ் ஆப் இந்தியா' கேட்கிறது!

"கலையில் உள்ள ஆபாசங்களைத் தடை செய்ய வேண்டியது இன்றியமையாதது. ஆனாலும், ஆபாசமான கலை என்ன என்பது திட்டவட்டமாக நிர்ணயிக்கப்படாத வேளையில், அழகுக் கலையுணர்வு பற்றிய அறிவு சிறிதும் பெற்றில்லாத ஒருவரிடம், ஆபாசக் கலைகளைத் தடை செய்யும் சட்டம் இருக்குமானால், அச்சட்டம் தவறான வழிகளில் உபயோகிக்கப்படுவதற்கே வழி ஏற்படுகிறது.'

"நாட்டில் நிலவுகிற அநீதிகளில் சுயநலத்தோடு கூடிய (தொடர்ந்து அந்த அநீதிகள் நிலவ வேண்டும்; அப்போதுதான் நமக்கு வாழ்வு எனும்) அக்கரை கொண்டுள்ள ஒரு கும்பலின் உண்மையான உருவத்தை ஒரு சிறிதளவு அம்பலப்படுத்தினாலும், அது, மக்களின் பல்வேறு பிரிவினரிடை துவேஷத்தை வளர்ப்பதாக எடுத்துக் கொள்ளப்படக்கூடும்,"

—என்று, பம்பாயிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற ஆங்கில தினசரி, தனது 5-12-54-ந் தேதிய இதழில் தீட்டியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

மேலும், அதில் காணப்படுவதாவது :—

"சென்னையில் கொண்டு வரப்பட இருக்கும் புதிய நாடகச் சட்டம், பம்பாய், பெப்சு ஆகிய மாநிலங்களில் இருக்கும் சட்டங்களை விட விரிவானது; ஏனெனில், இச்சட்டம், மாநில அரசாங்கத்தின் எண்ணப்படி, ஒரு நாடகம், மக்களின் ஒரு சாராரிடையேயோ, அல்லது இரு சாரார்களிடையேயோ பகை உணர்வை வளர்ப்பதாகக் கருதப்படுமானால் அந்த நாடகத்தைத் தடை செய்ய, மாநில அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கிறது."

"பலாத்காரத்தைத் தூண்டும் செயல்களைத் தடை செய்ய வேண்டியதும் நியாயமே; ஆனால் அத்தகு பலாத்காரத்தைத் தூண்டும் செயல்களைத் தடுக்க ஏற்கனவேயுள்ள பொதுவான சட்டங்களே மாநில அரசாங்கத்திற்குப் போதுமான அளவு அதிகாரமளித்துள்ளன; ஆதலால் நாடகங்களின் மூலம் பலாத்காரத்தைத் தூண்டும் பிரச்சாரத்தைத் தடுக்கத் தனியாக ஒரு சட்டம் இயற்றிக்கொள்ளத் தேவையே இல்லை."

"ஆட்சேபணைக்குரிய நாடகங்கள் என்று, வரையறை எதுவுமின்றியும், சுட்டிக்காட்டாத நிலையற்ற முறையிலும் சென்னை நாடகச் சட்ட மசோதாவில் கூறப்பட்டிருப்பதைப்போல் வேறெந்தச் சட்டத்திலும் குறிப்பிடப்படவில்லை."

"நாடகங்கள், நல்லொழுக்கங்களை விளக்கவும், மனசாட்சியை நினைவூட்டுவதற்கும் உதவக்கூடியன."

"நாடகங்களுக்கான சட்டம் இயற்றப்பட்ட 1876-ம் ஆண்டிற்கும்—இன்றைக்குமிடையே எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன; ஆகவே, அந்தச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டியது என்று சென்னை அரசாங்கம் கூறுவது உண்மையே; ஆனால், சென்னை அரசாங்கமோ 1876-ம் ஆண்டு நாடகச் சட்டத்தில் சில மாறுதல்களை மட்டுமே செய்துதான் புதிய சட்டத்தை உருவாக்கியுள்ளது."

"அதிகாரிகளின் முடிவிற்கு எதிராக அப்பீல் செய்துகொள்வதற்காக உள்ள ஏற்பாடு எந்த வகையிலும் இந்த மசோதாவின் கடுமையைக் குறைத்துவிடவில்லை; ஏனெனில், பெரும்பாலான நாடகக் குழுவினர் நீதிமன்றம் ஏறி, தங்களது உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள தேவையான வசதியும் வாய்ப்பும் அற்றனராகவே உள்ளனர்.

## குருவின் பாதையில் — செல்லும் கோவைச் சீமான்

### 'மதத்தையும் மதக் கடவுளையும் கண்டிக்க அனுமதியோம்!'

### 'சுதந்திரம் தேவையென்றால் வெளிநாட்டிற்குப் போய்விடலாம்'!

சட்டசபையில் நாடகச் சட்ட மசோதாபற்றி நிதிமந்திரி

சென்னை, டிச. 8—

"இராமனையும், சீதையையும், ஆண்-பெண் கற்புக்கு வழிகாட்டியாக நினைத்து ஏராளமான மக்கள் வணங்குகிறார்கள்; மக்களின் இதுபோன்ற உணர்ச்சியை இழிவுபடுத்த விரும்புவோர், தங்களுக்குச் சுதந்திரம் அளிக்கும் வேறு எந்த வெளிநாட்டிற்காவது போய்விடலாம்," என்று நாடக சட்ட மசோதா விவாதத்திற்குப் பதிலளிக்கையில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:-

"மற்றவர்களின் மத உணர்ச்சியைப் புண்படுத்துவதைத் தடுக்க மசோதாவில் உள்ள ஷரத்து (மதப் பிரச்சினைகளில்) நாணயமான கண்டனத்தைத் தெரிவிக்க அனுமதிக்காது என்று சொல்கிறார்கள்; பலர் இதை ஆட்சேபிக்கின்றனர்.

இந்தப் பிளவு மிகவும் விரிவான முறையில் உள்ளதென்றும், சமூகத்தைச் சீர்திருத்தவும், மக்களுக்கு அறிவு புகட்டும் நோக்கத்துடனும் சொல்லப்படும் நாணயமான கண்டனத்தையும் தடுத்துவிடும் என்று கூறுகின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## புனைந்துரையை உண்மை என வெளியிடும் விஷமம்!

### பேசாததைப் பேசினதாக — வெளியிடும் பித்தலாட்டம்!

### 'தினத்தந்தி'யின் சிகண்டி போக்கிற்கு ஈ. வெ. கி. சம்பத் கண்டனம்

கடந்த நவம்பர் 21, 22 ஆகிய தேதிகளில் முறையே சிவகங்கையிலும், திருப்புத்தூரிலும் கழகக் கூட்டங்களில் கலந்து கொண்ட தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசியதாக, வழக்கம்போல பரபரப்பான தலைப்புகளிட்டு, 'தினத் தந்தி' நவ, 29, 30 தேதிகளில் செய்திகள் வெளியிட்டுள்ளது.

'தினத் தந்தி' செய்தி வெளியிடும் 'லட்சணம்' வாசகர்கள் அறிந்ததே! அதே போக்கிலேயே தோழர் சம்பத் அவர்களின் சொற்பொழிவையும் திரித்து, புனைந்து, பொய் கலந்து, பேசாத ஒன்றைப் பேசியதாக 'தினத் தந்தி' வெளியிட்டுள்ளது.

அச்செய்திகள், தவறானவை என்பதை கீழ்க்கண்ட கண்டன அறிக்கையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அம்பலப் படுத்தியுள்ளார்.

'தினத் தந்தி', 29-11-54-ல், "தி. மு. க. பருவ மங்கை கற்பிலே கண்ணகி" எனவும், 30—11—54-ல், "தி. மு. க. பருவ மங்கையின் காதலன் யார்" என்னும் தலைப்பிட்டு எனது பேச்சு என வெளிவந்த செய்திகளில் உண்மை சிறிதும் இல்லை.

நவம்பர் 21-ந் தேதி சிவகங்கையிலும், 22-ந் தேதி திருப்புத்தூரிலும் பேசினேன். யாரும் 'தினத் தந்தி' கார்ட்டூன் பற்றி கேள்வி கேட்கவில்லை.

சொந்தக் கற்பனையை, 'செய்தி' என்று வெளியிடும் இழி தன்மையை மிகவும் கண்டிக்கிறேன்.

## வருந்துகிறோம்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மைத்துனர் தோழர் அரங்கநாதன் உடல் நலமின்றி மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார். 8—12—54 இரவு 8-30 மணிக்கு சென்னை ஜார்ஜ்டவுன், கருப்பண்ணன் தெரு எண். 19 இல்லத்தில் இயற்கையெய்தினார். 9—12—54 பிற்பகல் 1-30 மணிக்கு அவரது உடல் மூலக்கொத்தளம் மயானத்தில் அடக்கம்செய்யப்பட்டது.

அவரது பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும், பொதுச் செயலாளர் அண்ணாத்துரை, அவர்களது துணைவியார் திருமதி ராணி அம்மாள் ஆகியவர்கட்கும் நமது அனுதாபத்தையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

---

இந்தியாவிலுள்ள ஹிராகுட் அணை,பல காரிய நதி அபிவிருத்தி திட்டங்களுள் உலகிலேயே உள்ள மிகப் பெரிய அணையாகும்.

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 10—12—1954 வெள்ளி


# 'கழுத்தறுப்பு' சட்டம்!

தமிழ் நாடகக் கலையின் 'கழுத்தை அறுக்க' 'கூரிய வாள்' ஒன்றை வடித்தெடுக்க சென்னை அரசாங்கம் முன் வந்திருக்கிறது. நாடகக் கலை குறித்து வெள்ளை ஏகாதிபத்திய அதிகார வர்க்கத்தினரால் 1876-ம் ஆண்டு இயற்றப்பட்டு, இதுவரை செயலாற்றப்பட்டு வந்த நாடகச் சட்டத்தின் கடுமையைத் தளர்த்தப்போவதாகப் பசப்பி, இனி நடைபெறக்கூடிய நாடகங்கள் அனைத்தையுமே, அந்நாடகங்கள் நடிக்கப்படுவதற்கு முன்னதாகவே தடுத்துத் தொலைத்துவிடும் ஆற்றல் கொண்ட புதிய நாடக மசோதா ஒன்றை சென்னை சர்க்கார் உருவாக்கி இருக்கிறது. ஒரு நாடகம் நடிக்கப்படுவதற்கு முன்னதாகவே, அந்நாடகத்தைத் தடுத்துவிடும் அதிகாரம், நடைமுறை சட்டத்தில் இருந்த போதிலும்கூட, அத்தடையை எதிர்த்து வழக்காடும் உரிமை, தடையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இல்லாமல் இருக்கிறது. அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்காடும் உரிமை இல்லாமல் இருப்பது, அரசியல் சட்ட விதிகளுக்கு முரண்பாடு உடையதாக இருந்தும் வருகிறது. அதன் விளைவாக குறிப்பிட்ட ஒரு நாடகத்தை நடிக்கக்கூடாது என முன்கூட்டியே, நடைமுறை சட்டத்தின்படி, அரசாங்கத்தால் தடை விதிக்க முடிவதில்லை. எனவே, வழக்காடும் உரிமையை, புதிய மசோதாவில் சேர்த்து, தங்களுடைய ஆதிக்க வெறிக்கு, சட்டப்படி அதிகாரம் பெற முன்வந்திருக்கிறது அரசாங்கம். அதை உடனடியாகப் பெற வேண்டும் என்ற கேடு நினைப்புத்தான், புதிய நாடக மசோதா உருவாக்கப்பட்டதற்கும், அதை இப்பொழுதே சட்டமாக்கிவிட வேண்டுமென அரசாங்கம் துடியாய்த் துடிப்பதற்கும் உள்ள மூல காரணம்.

குறிப்பிட்ட நாடகத்திற்கு அரசாங்கம் விதிக்கும் தடையை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்கள் வழக்காட உரிமை இல்லாதிருப்பது மக்களாட்சி முறைக்கு ஒத்ததல்ல; அவர்களுக்கு அந்த உரிமையை வழங்கியே தீர வேண்டும் என்ற நல்லெண்ணம் ஆட்சியாளர்களுக்கு இருக்குமானால், அவ்வுரிமையை வழங்கிடும் வகையில் நடைமுறை சட்டத்தில் திருத்தம் செய்திருக்கலாம். அப்பொழுது, நடைமுறை சட்டமும் இந்திய அரசியல் சட்டத்திற்கு உடன்பாடு கொண்டதாக ஆகிவிடுவதுடன், பாதிக்கப்பட்டவர்கள் வழக்காடும் உரிமையையும் பெற்றுவிடுகின்றனர். அச்சிறு செயலால், ஒரே காலத்தில் அரசாங்கத்தின் இரண்டு நோக்கங்களும் நிறைவேறி விடுகின்றன.

இதற்கு, அரசாங்கம் ஒரு சமாதானம் கூற முன்வரும். அதாவது,' 1876-வது ஆண்டு நாடக சட்டம் மத்திய அரசாங்கத்தால் இயற்றப்பட்டது; அதில் திருத்தம் செய்வதற்கு உரிமை கிடையாது,' என அரசாங்கம் சொல்லக்கூடும். நிலைமை இதுவானால், மத்திய அரசாங்கச் சட்டத்தை எழுத்துக்கு எழுத்து அப்படியே நகல் இறக்கி, வழக்காடும் உரிமை வழங்கும் விதியையும் காட்டி, புதிய நாடக மசோதாவை உருவாக்கி, சட்டமாக்க முனைவதுதான் முறையாகும். ஆனால், அரசாங்கமோ, அந்தப் போக்கைக் கையாளாமல், எதிர்காலத்தில் நாடகக் கலையையே கொலை செய்திடும் அளவில் ஒரு கடுமையான மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது. வழக்காடும் உரிமை வழங்குவதல்ல; ஆனால் அதைக் கூறிக்கொண்டு, நாடகக் கலைத் துறையில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளும் ஒரு வாய்ப்பைப் பெறுவது என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து என்ற உண்மையை, புதிய நாடகக் கட்டுப்பாடு மசோதா வெளிப்படுத்துகிறது.

குறிப்பிட்ட ஒரு நாடகத்தை நடிக்கவிடாமல் தடுப்பதற்காக, அரசாங்கம், புதிய மசோதாவில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளோ மிக மிக விரிந்தும், கடுமையில் கூடியும் உள்ளன என்பதோடு மட்டுமல்லாமல், அரசாங்க அமைச்சர்களின் அபிலாஷைகளையும், அரசாங்க அதிகாரிகளின் குறிக்கோள்களையும் முன்கூட்டியே கலந்து விளக்கம் பெற்று, அக்கருத்துக்களை உயிரற்ற சொற்களால் சித்தரித்து, நாடகமியற்றி, அதை நடிப்பதற்கும் முன்னதாக ஆளவந்தார்கள் ஒப்புதல் பெற்றுத்தான் நடித்தாகவேண்டும் என்றும், நடிகத் துறையினரைக் கட்டுப்படுத்தும் நிலையிலும் உள்ளன. புதிய நாடக மசோதாவின் கொடிய கட்டுப்பாட்டுக் கரங்களின் பயங்கரப் பிடியிலிருந்து, நாடகக் கலையைக் காப்பாற்றி வளர்த்துவர வேண்டுமானால், நடிகத் துறையினர், அரசாங்க அமைச்சர்களையும், அதிகாரிகளையும் ஆசிரியர்களாகக் கொண்டு, புதிய நாடகங்களை இனிமேல் இயற்றி நடிக்க முன்வந்தால்தான், நாடகக் கலையில் கவலை கொண்டுள்ள கலைஞர்கள் அச்சமின்றி வாழ முடியும் என்ற நிலையை, புதிய நாடக மசோதா, அவர்களுக்கு உண்டாக்கி இருக்கிறது எனக் கூறுவது மிகையாகாது.

இத்தகு கட்டுப்பாடு மசோதாவைக் கொண்டுவர வேண்டிய கட்டாயம் என் அரசாங்கத்திற்கு இத்தருணத்தில் உண்டாயிற்று என்பதையும் ஒளிவு மறைவு இல்லாமல், அதன் மூலபுருஷரான அமைச்சரே அறிவித்தும் உள்ளார்.

நடைமுறை நாடகச் சட்டம், அரசியல் சட்டத்திற்கு முரண்பாடு கொண்டதாக இருப்பதினால், அச்சட்டத்தின் கீழ், நடைபெறக்கூடிய நாடகங்களை ஒரேயடியாகத் தடுத்துவிட அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என்பது உண்மைதான். இருந்தாலும், புதிய மசோதாவில் ஆட்சேபகரமான அம்சங்கள் எனக் கூறப்பட்டுள்ளவற்றை நாடகக் கலை மூலம் மீறுகிறவர்கள் மீது வழக்குத் தொடரவும், தண்டனையைத் தேடித்தரவும் ஏற்கனவே உள்ள கிரிமினல் சட்ட விதிகளின்கீழ் இடமிருக்கிறது. இந்த விதிகளின்கீழ்தான், வெள்ளை அரசாங்கம், ஆட்சேபகரமான தேசிய நாடகங்கள் நடத்தினவர்கள்மீது வழக்குத் தொடுத்து தண்டனையைத் தேடித் தந்தும் இருக்கிறது. அம்முறையையே காங்கிரஸ் அரசாங்கமும் பின்பற்றி, ஆட்சேபகரமான கருத்துக்களைக்கொண்டு நாடகம் நடிக்கும் நடிகர்கள் மீது வழக்குத் தொடுக்க முன்வரலாம். சட்டத்தின்படி நீதி நிறைவேறுவதை ஒருவரும் ஆட்சேபிப்பதற்கும் இல்லை. அந்த முறை நியாயமானது, நேர்மையானது, மக்களாட்சி முறைக்கு உகந்தது என்ற நல்லறிவு காங்கிரஸ் அரசாங்கத்திற்குத் துளியும் இல்லை. எனவே, புதிய மசோதாவினால், பாதிக்கப்பட்ட நடிகத் துறையினர் எதிர்த்து வழக்காடும் உரிமை பெறுகின்றனர் என்பதைப் புகலாகக் கூறிக்கொண்டு, நாடகத் துறையில் தங்கள் நாசகரத்தைச் செலுத்த முன்வந்துள்ளனர் ஆட்சியாளர்கள்.

அரசாங்கத்தை எதிர்த்து வழக்காடும் நெஞ்சத் துணிவும், பண பலமும் பெற்றிருப்பவர்களை நாடகத் துறையில் காண்பதென்பது மிகமிக அரிது. உரிமைக்குப் போராடுவது என்பது, அரசாங்கத் தடையால் பாதிக்கப்பட்டவர்களுக்குள்ள இடம் பொருள் ஏவலைப் பொறுத்துள்ள விஷயமாகும். இம்மூன்று நிலைமைகளையும் பெற்றிருப்பவர்கள் நாடகத் துறையில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களாவர். எனவே, புதிய மசோதாவில் வழங்கப்பட்டுள்ளதாகச்சொல்லப்படும் வழக்காடும் உரிமை, எவராலும் செயலாற்ற முடியாத வெறும் ஏட்டு உரிமையேயாகும். அரசியல் சட்ட விதிகளுக்கு முரண்படாமல் புதிய மசோதா இருக்க வேண்டும் என்ற தங்கள் உள்ளெண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான், வழக்காடும் உரிமைவிதி, மசோதாவில் சேர்க்கப்பட்டிருக்கிறதே அல்லாது, அதனால் நடிகத் துறையினர் பயன் பெற வேண்டும் என்ற உயர் நோக்கத்தால் அல்லவே அல்ல என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

இதுபற்றி ஆங்கில தினசரிகளான 'இந்து'வும், 'மெயிலும்', பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா'வும், தமிழ் தினசரியான 'சுதேசமித்திரனு'ம் தலையங்கங்கள் தீட்டியுள்ளன. அவைகளில் உள்ள முக்கிய பகுதிகளையும் எடுத்துக் காட்டி, சென்னை சட்டசபையில் புதிய மசோதாவின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு கல்வி அமைச்சர் கூறிய பதிலின் தன்மை குறித்தும் நாளை எழுதுவோம்.

## எகிப்தில் ஆர்ப்பாட்டம்

முஸ்லிம் சகோதரத்துவ நிறுவனத்தைச் சேர்ந்த ஆறு பேர்களைத் தூக்கிலிட்டதை எதிர்த்து, அம்மான் நகரில் அதே நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிரக் கணக்கில் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். எகிப்திய சர்க்காருக்கு எதிராகவும், பிரதமர் கர்னல் நாசருக்கு எதிராகவும் அவர்கள் ஒலி முழக்கம் செய்தனராம்.

## கனடாவிலும் இனப் பாகுபாடு

### எதிர்த்துப் போராட சீக்கியர் முகாம்

கனடா குடியேற்றச் சட்டத்தில் கனடாவில் வாழும் இந்தியர்களைப் பாகுபாடு செய்கிற விதிகள் இருப்பதால் அவற்றை எதிர்த்து ஒட்டாவா நகரில் அடுத்த மாதம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

விக்டோரியாவில் உள்ள சீக்கிய வகுப்பைச் சேர்ந்த ஒருவர், "பிரிட்டிஷ் கொலம்பியாவில் வசிக்கும் 2000 சீக்கியர்கள் தூது கோஷ்டி ஒன்று, அடுத்த மாதம் ஒட்டாவா சென்று, வேறுபாடுகளைப் போக்கும் மாற்றங்களுக்காக முயற்சி செய்யும்" என்றுகூறியிருப்பதாகத் தெரிகிறது.

"ஐரோப்பிய பரம்பரையைச் சார்ந்த கனடியர்களைப் போலவே, கனடாவில் வேலை கிடைத்து பணி புரியும் சீக்கியர்களுக்கும், தங்கள் குடும்பங்களைக் கனடாவிற்கு அழைத்துகொள்ள உரிமை வேண்டும்," என்று, அந்த சீக்கியர் கூறியதாகத் தெரிகிறது.

## நிறபேதக் கொள்கை

### தென்னுப்பிரிக்க பிரதமர் விளக்கம்

தென்ஆப்பிரிக்காவில் புதிதாக பதவி ஏற்றிருக்கும் பிரதமர் ஸ்ட்ரீடம் தனது புதிய நிறவேற்றுமைக் கொள்கையை விளக்கி அறிக்கை ஒன்று விடுத்திருக்கிறார்:—

"சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால், வெள்ளையர்களுக்கும், கறுப்பர்களுக்கும் இடையே நல்லுறவு நிலவும் பொருட்டு, நிறவேற்றுமைக் கொள்கையை தீவிரமாக அமுல் நடத்த வேண்டும்."

"வெள்ளையர்களின் அதிகாரத்தைக் காப்பாற்றவும், கிருத்துவர்களின் நாகரீகத்தைக் காப்பாற்றவும், பெரும் பிரயத்தனங்கள் செய்யவேண்டியிருக்கிறது; தென் ஆப்பிரிக்கா மட்டும் இதைச் செய்ய முடியாது; தென்ஆப்பிரிக்காவில் உள்ள பெரும்பான்மையினரும், ஆப்பிரிக்காவில் உள்ள மற்றவர்களும், இத்திட்டத்துடன் ஒத்துழைக்க வேண்டும்."

"இப்பாதையை நோக்கி நாங்கள் முன்னேறுகிறோம்; எங்கள் நோக்கத்தைப் பலர் ஒத்துக் கொள்கிறார்கள்," என்று, அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## "சூ-என்-லாய் போக்கில் புதிய மாற்றம் இல்லை"

### அமெரிக்க அதிகாரி கூற்று

வாஷிங்டன், டிச. 8—

"சீனப் பிரதமர் சூ-என்-லாய், 'அமெரிக்க—தேசிய சீன ஒப்பந்தம் போருக்குத் தயார் செய்யும் போக்குடையது,' என்று குற்றம் சாட்டியிருப்பது, உண்மைக்குப் புறம்பானதாகும்," என்று அமெரிக்க இராஜாங்க இலாகா அதிகாரி ஒருவர் கூறியதாகத் தெரிகிறது.

"அமைச்சர் டல்லஸின் அறிக்கையும், ஒப்பந்தத்தின் ஷரத்துக்களும், 'அது ஒரு பாதுகாப்பு ஒப்பந்தமே,' என்பதை எடுத்துக் காட்டியது," என்று அந்த அதிகாரி மேலும் கூறினர்.

"சூ-என்-லாயின் எச்சரிக்கையில், புதிதாக எதும் இல்லை," என்று அவர் குறிப்பிட்டார்.

## புதிய கிரகம்

வாஷிங்டன், டிச. 8—

இங்குள்ள தேசிய பூமி நூல் ஆராய்ச்சிக் கழகம், சென்ற ஞாயிறன்று, புதிய கிரகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவித்தது.

கலிபோர்னியா தொழிற் கழகத்தின் வான ஆராய்ச்சி நிபுணர் ஜார்ஜ் ஆபெல் என்பவர்தான் இந்த கிரகத்தைக் கண்டுபிடித்தார் என்று சொல்லப்படுகிறது.

## பட்டம் அடக்குமுறை பரவுகிறது

### மேலும் 8 பேர் திடீரென கைது!

இரணியல், டிச. 6—

நெய்யூரைச் சேர்ந்த ஜே. அந்தோணி, திங்கட்கிழமைச் சந்தையைச் சேர்ந்த எஸ். கணேசன், எஸ். செல்லக்கண்ணு, மோசஸ், என். பத்மனாபன், எஸ். எஸ். குட்டி, வேலுமயில், கே. திருச்சிற்றம்பலம் ஆகிய எட்டுப் பேர்களையும், இரணியல் போலீசார் திடீரென கைது செய்து, பத்மனாபபுரம் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் நிறுத்தி, 'ரிமாண்டு' அனுமதியும் பெற்றிருக்கின்றனர்.

திருவாங்கூர் தமிழக இணைப்புப் போராட்டத்தின் எதிரொலியாகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அப்போராட்ட தினத்தன்று குழப்பம் விளைவித்ததாக இருபது பேர் மீது போலீசார், மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குப் பதிவு செய்துள்ளனரென்றும், இவ்வழக்கு சம்மந்தப்பட்ட மற்ற எதிரிகளும் கைது செய்யப்படுவரெனவும் கூறப்படுகிறது.

டிசம்பர் திங்கள் 20-ந் தேதியன்று வழக்கு விசாரணை நடைபெறும் என்று கூறப்படுகிறது.

## திரு-தமிழக பிரச்சினை

### காங்கிரசின் கண் திறக்கிறது!

திரு-கொச்சி மாநிலத்துடன் இணைந்துள்ள 9 தமிழ் தாலுகாக்களையும், காங்கிரஸ் ஸ்தாபன ரீதியாக, தமிழ் நாட்டுக் காங்கிரஸ் குழுவுடன் இணைக்க வேண்டுமென்று தமிழ் நாட்டுக் காங்கிரஸ் மேலிடத்தில் முடிவு செய்துள்ளதாகவும், அம்முடிவுக்கு அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களின் ஆதரவு கிடைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஏற்கனவே, திரு-கொச்சி மாநிலத்துடன் இணைந்துள்ள ஒன்பது தமிழ் தாலுகாக்களையும் சென்னை மாநிலத்துடன் இணைக்க வேண்டுமென்று சென்னை சர்க்காரும், தமிழ் நாடு காங்கிரசும் மாநில புனரமைப்புக் குழுவினரிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

ஜனவரி திங்களில் சென்னை ஆவடியில் நடைபெறவிருக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டில், திரு-கொச்சியிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களை தமிழ் நாடு காங்கிரஸ் குழுவில் சேர்க்க வேண்டுமென்று தீர்மானம் ஒன்றை த. நா. கா. பிரதிநிதிகள் கொண்டுவருவர் எனவும், அம்மாநாட்டில், இந்தத் தீர்மானத்துக்கு பெருவாரியான ஆதரவு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## விவசாயிகள் அறப்போர்

### வட மலபாரில் 20 பேர் கைது

மலபார் மாவட்டத்தின் வட பகுதியில் உள்ள குத்தாலி எஸ்டேட்டின் மத்தியில் துவங்கிய விவசாயிகளின் அறப்போராட்டத்தையொட்டி சுமார் 20 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

இந்தக் கிளர்ச்சிக்குக் காரணம் முதுக்காட்டில் தொழில் செய்யும் 32 குடும்பங்களை நிலத்திலிருந்து வெளியேற்ற அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளதே என்று தெரிகிறது.

முதுக்காடு கிசான் பஞ்சாயத்துச் செயலாளர் திரு. தேபாசி என்பவரின் குடும்பத்தினரை, ரிசர்வ் போலீசார் கைது செய்து அவர்களை நிர்ப்பந்தமாக வெளியேற்றி அவர்களின் வீட்டை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர் எனத் தெரிகிறது.

# திருமலை - திருப்பதி தேவஸ்தானம்

## யாத்திரீகர்களுக்குப் போதுமான வசதி செய்து தரவில்லை

### ஆண்டறிக்கை தரும் விபரம்

திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தின் நிர்வாக அறிக்கை வெளியாகியுள்ளது. இது 1953–54ம் ஆண்டு நிர்வாகத்திற்கானதாம்.

இந்த ஆண்டில் மொத்த வருமானம் ரூ. 20,37,478 ஆகுமென்று தெரிகிறது.

நிர்வாகத்தினர், யாத்திரீகர்களுக்கு பலவகை வசதிகள் செய்து தருகின்றனர்.

நிர்வாகத்தினர் அமைத்துள்ள சத்திரங்கள் 2000 பேருக்கு மட்டுமே போதுமானவை; ஆனால் தினம் சுமார் 4,000 யாத்திரீகர்கள் வருகின்றனர். எனவே, இப்போதுள்ள வசதிகள் போதுமானதல்ல.

மொத்த வருமானத்தில் இப்போது செலவு போக இந்த ஆண்டு துவக்கத்தில் மீதமிருப்பது ரூ. 4,76,210—4—2 ஆகும்.

இந்த ஆண்டில் தான் திருப்பதி வெங்கடேஸ்வரனுக்கு 'வைகுந்த ஹஸ்தம்' செய்து வைக்கப்பட்டதாம்.

இதற்கான மொத்தச் செலவு ரூ. 2,51,000 ஆகும் என்று தெரிகிறது.

**'ஹஸ்தம்' செய்வதற்கான விலையுயர்ந்த வைரங்கள் பெல்ஜியத்திலிருந்து வரவழைக்கப்பட்டனவாம்.**

திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தின் செலவில் நடைபெறும் கல்வி நிலயங்கள் வருமாறு:—

ஒரு சவமொழிக் கல்லூரி; திருப்பதி, வேலூர் ஆகிய இடங்களில் ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளிகள், இரண்டு கல்லூரிகள் (ஒரு பெண்கள் கல்லூரி உட்பட), திருமலையில் ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலை, திருப்பதியில் அனாதைக் குழந்தைகளுக்கென ஒரு ஆரம்பப் பாடசாலை, ஒரு ஏழைகள் விடுதி, அனாதை விடுதி.

இவை அத்தனையும் தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.

# பின்தங்கிய வகுப்பு மக்கள்

## அரசியல் கட்சிகளால் பயன்படுத்தப்படுகின்றனர்!

### ஆந்திர பின்தங்கிய வகுப்பு தலைவர் கண்டனம்

கர்னூல், டிச. 7—

ஆந்திர பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்களின் கூட்டமொன்று கர்னூலில் நடைபெற்றபோது, பின்தங்கிய வகுப்பினரை பல்வேறு அரசியல் கட்சியினரும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியும், தங்களின் கட்சி நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்; இது கண்டிக்கத் தகுந்தது என்ற தீர்மானம் ஒன்று நிறைவேறியுள்ளது.

ஆந்திராவில் சுமார் 50 சாதியினராய் ஒரு கோடி பின் தங்கியவர்கள் இருக்கின்றனர். முன்பு அவர்கள், பலரால் தங்கள் தங்கள் சொந்தக் காரியங்களுக்கு பலியிடப்பட்டு வந்தனர். இப்போது அரசியல் கட்சியினர், பின் தங்கிய வகுப்பினரின் நலன்களை தங்கள் கட்சிக்காகப் பலியிட்டுக் கொள்கின்றனர். எனவே, இனி, எந்த அரசியல் கட்சிக்கும் தங்கள் ஆதரவைத் தருமுன்னர் பின் தங்கிய வகுப்பு மக்கள் மிகவும் யோசிக்க வேண்டும்" என்று ஆந்திர மாநில பின் தங்கிய வகுப்புகளின் சங்கத் தலைவர் கூறியிருக்கிறார்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் செலவழிக்கத் திட்டமிடப்பட்டுள்ள மொத்த தொகை ரூ 2,290 கோடி ஆகும்.

# மனித உரிமை மதிக்கப்படுகிறதா?

மனித உரிமைகளை நிலை நாட்டுவதற்கு எல்லா நாடுகளும் எத்தகைய நோக்கங்களை உடையவையாக இருக்க வேண்டுமென்பதை ஐ. நா. பொதுச்சபை 1948 டிசம்பர் 10-ந் தேதி மனித உரிமைகள் சாசனத்தின் மூலம் வெளியிட்டது.

டிசம்பர் மாதம் 10-ந் தேதி மனித உரிமைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

மக்களுக்குப் பேச்சு சுதந்திரமும், தேவையும், பயமும் இல்லாத சுதந்திரமும் அளிக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதுதான் இச் சாசனம் அமைத்தவர்களின் நோக்கம்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்டுள்ள புது நாடுகளின் அரசியல் அமைப்புக்களிலும், சட்டங்களிலும் இச் சாசனத்தின் கொள்கைகள் இடம் பெற்றுள்ளன.

இன்றைய நாகரீக நிலைமையிலும் கூட கொடுமை இருக்கிறது என்றும், சுதந்திர நாடுகளில்கூட மனித உரிமைகள் எல்லா நேரங்களில் ஒரேமாதிரி முறையில் கௌரவிக்கப்படுவதில்லை என்றும் ஒத்துக்கொள்ள வேண்டியிருப்பது சங்கடமான நிலைமையேயாகும்.

மனித சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பணி, எல்லா நாட்டினரையும் சார்ந்ததாகும். இத்துறையில், ஒரு நாடும் முழு முன்னேற்றமடைந்துள்ளதாகக் கூறுவதற்கில்லை ஒவ்வொரு நாடும், மற்ற நாடுகளிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியவை பல உண்டு.

மனித உரிமைகள் சாசனத்தின் நோக்கங்களும், மனித சுதந்திரத்தை நிலைநாட்ட ஐ. நா. சபையின் உறுப்பினரான நாடுகள் எடுத்துக்கொள்ளும் பணியும் முக்கியத்துவம் பெற்றவையாகும்.

—ஆஸ்வால்ட் பி. லார்டு

### அறிவுப்பூங்கா நூல்நிலைய திறப்பு விழா

5—12—54 மாலை 5 மணிக்கு, மதுரை திண்டுக்கல் ரோடு, 9 கெ. கட்டிடத்தில், 'அறிவுப் பூங்கா' நூல் நிலையத் திறப்பு விழா நடைபெற்றது. இயக்கத் தோழர்களும், ஏனையோர்களும் கலந்துகொண்டனர். வந்திருந்த அனைவரையும் உரிமையாளர் எஸ். முத்து வரவேற்றார்.

### மதுரை இளங்கோ மன்றம்

5—12—54 மாலை 6–30 மணியளவில், தோழர் மு. சந்தானம் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், 2—12—54ல், இங்கு தோழர் நடிகர் எம். ஆர். இராதா நடத்திய 'இராமாயண' நாடகத்தை மறியல் செய்யப்போவதாகக் கூறி, நாடகத்தைக் காண வந்திருந்தோர் மீது கல்லெறிந்தும், நகரின் அமைதியைக் கெடுக்கும் வகையில் தீச்செயல்கள் பல புரிந்த குண்டர்களின் கொடுஞ்செயலை வன்மையாகக் கண்டித்தும், சென்னை சர்க்கார் கொண்டு வர இருக்கும் புது நாடகத் திருத்த மசோதாவைக் கைவிடுமாறு சர்க்காரைக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சொற் பயிற்சிக் கூட்டம்

5-12-54 மாலை 6-மணிக்கு சென்னை 35-வது வட்ட தி. மு. க. கிளையின் சொற் பயிற்சிக் கூட்டம் தோழர் க. இளங்கீரன் தலைமையில் நடைபெற்றது. 'விடுதலை வேட்கை' என்ற தலைப்பில் தோழர்கள் சா. வில்லவன், கிருட்டிணமூர்த்தி, அ.செ.க.துரை ஆகியோர் பேசினர்.

### முத்தமிழ் கலை மன்றம் சென்னை—இராயபுரம்

5—12—54 காலை 10–30-மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில், மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—தலைவர்: எஸ். மாரிமுத்து; துணைத் தலைவர்: வி. சுப்பிரமணி; கூட்டுச் செயலாளர்கள்: சி. ஆர். அர்ச்சுனன், என். பி. சண்முகம்; பொருளாளர்: கே. இ. சம்பந்தம்; மன்ற கணக்கு தணிக்கையாளர், விளையாட்டுப் பகுதி பொறுப்பாளர்: கே. மின்ரங்கம்; நிர்வாக உறுப்பினர்கள்: ஏ. இ. எஸ் மணி; ஏ. கே. சாமி, ஆர். ஜி. ராஜா, எல். லோகநாதன், ஏ. சுப்ரமணி.

### சென்னை — இராயபுரம் மீன்பிடிப்போர் கிளை சங்கம்

5—12—54 காலை 10 மணிக்கு தோழர் பி. இருசப்பன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கிளைச் சங்க நிர்வாகிகள் கூட்டத்தில், மீனவருக்கு கல்விச் சலுகை விஷயமாக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட மீனவர் குடிசைகளுக்கு இட வசதியும், நஷ்டஈடும் அளிக்குமாறும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், ஏழைச் சிறுவர்களுக்குப் பால் வினியோகம் செய்ய பால் பவுடர் கொடுத்துதவிய சென்னை சுகாதார இலாகா டைரக்டர், சென்னை கலெக்டர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# 25 நாட்களில் ஆறு தற்கொலைகள்!

## வேலையின்மையும், குடும்பத் தொல்லையுமே காரணம்?

அகமதபாத், டிச. 5—

கடந்த 25 நாட்களுக்குள்ளாக இந்த நகரில் மட்டும் ஆறு தற்கொலைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளனவாம்.

மூன்று பேர்கள் வேலையில்லாக் கொடுமையாலும், இன்னும் மூவர் குடும்பத் தொல்லைகளாலும் உயிரை மாய்த்துக் கொண்டனர் எனத் தெரிகிறது.

மூவர் ஆண்கள்; மூவர் பெண்கள்.

மூவர் நீரில் மூழ்கி இறந்தனர்; மூவர் தங்களைத் தாங்களே தீயிட்டுக் கொளுத்தி, தற்கொலை புரிந்து கொண்டனர் எனவும் கூறப்படுகிறது.

# நீண்ட நாள் சபைக்கு வராமலிருப்போருக்குத் தண்டனை

## மக்கள் சபையில் கோரிக்கை

"மக்கள் சபை உறுப்பினர்கள் இன்றுள்ள நிலையில், மூன்று நாட்கள் ஆஜராகி இருந்தால் ஒரு மாதச் சம்பளம் ரூ. 400 பெற முடிகிறது; சில அங்கத்தினர்கள் தொடர்ந்து நீண்ட நாட்கள் சபைக்கு வராமலேயே இருந்துவிடுகின்றனர்; வராமலிருக்கிற நாட்களுக்கு, அவர்களுக்கு சம்பளம் தரக்கூடாது; அவர்களில் பலர் 55 நாட்களுக்கு ஒரு நாள்தான் வருகின்றனர். இவர்களுக்கு சம்பளம் தர, ஏழை மக்களின் வரிப் பணம் பாழாவது நியாயமல்ல," என்று மக்கள் சபையில் டாக்டர் சோத்ராம் கித்வானி என்ற ஒரு உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்.

சபாநாயகர் மாவ்லங்கர் "இந்த யோசனையை, வராமலிருப்பது பற்றி விசாரிக்க நியமித்துள்ள குழு, ஆலோசிக்கலாம். இப்போதுள்ள சட்டப்படி, 60 நாட்களுக்கு மேல் ரஜா வேண்டுமானால்தான் உறுப்பினர்கள் கடிதம் எழுத வேண்டும்" என்று கூறியுள்ளார்.

# இந்திய டாக்டருக்கு மரண தண்டனை

## 'கள்ளக் காதல் புரிந்த' மனைவியை கொலை செய்ததே குற்றச்சாட்டு!

ஸ்பெயின் (டிரினிடாட்)—

டாக்டர் தலீப் சிங் என்பவர் தனது மனைவியைக் கொன்ற குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டார் எனத் தெரிகிறது.

டாக்டர் தலீப் சிங், கிழக்கிந்தியாவைத் தாயகமாகக் கொண்டவர்; சிங் வகுப்பைச் சார்ந்தவர். அவர் எடின்பரோ பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்.

கடந்த ஏப்ரல் 8-ந் தேதியன்று, டாக்டரின் மனைவியின் பிரேதம் கடலில் மிதந்துவந்ததாம். அதை ஒரு மீனவர் கண்டெடுத்து போலீசாரிடம் ஒப்படைத்தார்.

இன்கே என்ற அந்த 29 வயதுடைய பெண்மணி, கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டு, குடல் சரிந்த நிலையில், தலை மட்டும் வெளியில் தெரியும் வகையில், கோணி ஒன்றில் திணித்துக் கட்டி கடலில் எறியப்பட்டாள் என்று சர்க்கார் தரப்பில் கூறப்பட்டது.

'டிரினிடாடி'ல், கடந்த ஒரு நூற்றாண்டில், இதுவே மிக அதிசயிக்கத்தக்க கொலையாகும் என்று ஆங்குள்ள பத்திரிகைகள் வர்ணித்திருந்தனவாம்.

தான் குற்றமற்றவர் என வாதாடிய டாக்டர் சிங், தனது மனைவி கடந்த ஏப்ரல் 6-ந் தேதியன்று டெலிபோனில் யாருடனோ பேசிவிட்டுச் சென்றதாயும், அதன் பின் திரும்பவேயில்லை யென்றும் நீதிமன்றத்தில் கூறினாராம்.

மேலும் தனது வாக்கு மூலத்தில், டாக்டர் சிங், "எனது மனைவியை, 'வின்வர்ட்' தீவுகளில் உள்ள 'கிரெனடா'வின் உதவி நிர்வாகியான வெர்னன் கிப்ஸ் என்பவருடன் கண்டேன்; அப்போது கிப்ஸ், எனது மனைவியுடன் தாம் கடந்த 18 மாதங்களாக 'மிக நெருங்கிய தொடர்பு' கொண்டிருப்பதாக ஒப்புக்கொண்டார்" என்றும் குறிப்பிட்டுள்ளாராம்.

# இந்தியா - பாகிஸ்தான் தகராறுகள்

## இரு நாட்டுப் பிரதமர்களும் ஜகார்தாவில் உரையாடல்

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிடையேயும், காஷ்மீர் உட்பட, தீர்க்கப்படாதிருக்கும் பல பிரச்சினைகள் குறித்து அவ்விரு நாடுகளிடையேயும் அண்மையில் நேரிடைப் பேச்சு ஆரம்பமாகக்கூடுமென நம்பப்படுகிறது.

ஆசிய - ஆப்பிரிக்க மாநாட்டின் பூர்வாங்கக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கொழும்பு நாடுகள், ஜகார்தாவில் இம்மாதம் 28-ந் தேதி கூடிப் பேசவிருக்கின்றன அல்லவா? அதுபோது, இந்தியப் பிரதமர் நேருவும், பாக். பிரதமர் முகம்மது அலியும், இப்பிரச்சினைகள் குறித்து பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தக்கூடும்.

ஜகார்தாவில் அவ்விரு பிரதமர்களின் பேச்சுக்கள் பலன்தரத்தக்கவையாயிருக்குமானால், அடுத்து அவர்கள் லண்டனில் நடைபெறும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டின்போது கூடிப் பேச வசதியாயிருக்குமெனத் தெரிகிறது.

### அனுதாபம்

'கல்கி' ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி இயற்கை எய்தியது குறித்தும், சென்னை மாவட்ட 33–வது வட்ட தி. மு. கழகத்தின் உறுப்பினராகிய தோழர் கண்ணன் இயற்கை எய்தியது குறித்தும் சேத்துப்பட்டு ஜெகன்னாதபுரம் சமூக முன்னேற்ற சங்கத்தினர்களாகிய நாங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என அறிவிக்கப்படுகிறது.


**கர்நாடக தி. மு. கழக முதலாவது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்**

★

**பெங்களூர் கண்டோன்மெண்ட் பிளாக்பள்ளி மைதானத்தில், மஜீத் பந்தலில் கைலாசம் அரங்கில் நடைபெறும்**

| 18—12—54 சனி: | 19—12—54 ஞாயிறு: |
|---|---|
| **சமூக சீர்திருத்த மாநாடு** | **அரசியல் மாநாடு** |
| தலைவர்: காஞ்சி கல்யாணசுந்தரம் | தலைவர்: என். வி. நடர்ாசன் |
| திறப்பாளர்: ப. உ. சண்முகம் | திறப்பாளர்: தோழியர் அருண்மொழி |

இரண்டு நாட்களிலும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத், மு. கருணாநிதி, க. அன்பழகன், சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனார், கே. ஆர். ராமசாமி மற்றும் கழக முன்னணி வீரர்களும் கலந்துகொள்வர்

★

இசைமுரசு நாகூர் அனீபா குழுவினரின் இசை விருந்து உண்டு

**19-12-54 பிற்பகல் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினரால்**

"நான் கண்ட ரஷ்யா" வில்லுப்பாட்டு நடைபெறும்

மாநாட்டுக் கட்டணம் (இரண்டு நாட்களுக்கும்):

வரவேற்பாளர் ரூ. 3, பிரதிநிதி ரூ. 2, பார்வையாளர் ரூ. 1, பெண்கள் அணா 8

| வ. கு. தலைவர்கள்: | செயலாளர்கள்: | பொருளாளர்: |
|---|---|---|
| எஸ். ஜே. உசேன், எஸ். வி. பதி | ஏ. டி. பிரான்சிஸ், செ. விழியன் | எம். ஆர். பெருமாள் |

விளம்பரக் குழு: கி. சோழன், வெங்கடசாமி தொ. ப. தலைவர்: ஆர். ராகவன் துணை: சு. கண்ணன்

# சென்னை சட்டசபையில்.....

★

### வீடு கட்டித் தருவார்களாம்

"கைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு வீடுகட்டித் தருவதற்கான திட்டமொன்று பரிசீலனையிலிருக்கிறது. திட்டத்தின் அமைப்பு, மதிப்பீட்டுத் தொகை இவற்றை மாற்றியமைக்க வேண்டுமென மத்திய அரசாங்கம் அறிக்கை அனுப்பியுள்ளது. அதற்கொப்ப, திட்டத்தை மாற்றியமைக்கும் வேலையில், நகர அமைப்பு அதிகாரி ஈடுபட்டுள்ளார். அது பூர்த்தியானதும், இந்தியப் பேரரசின் அங்கீகாரத்திற்காகவும், நிதி உதவிக்காகவும் அனுப்பப்படும்.

"இதன்படி செம்பியத்தில் 518 வீடுகளும், எருக்கஞ்சேரியில் 417 வீடுகளும் கட்டப்படும். இந்த வீடுகள் ஒரே ஒரு அறைக்கட்டுள்ள சிறிய வீடுகளாகவே இருக்கும்," என மந்திரி பக்தவத்சலம் அறிவித்துள்ளார்.

### வீட்டுக் கட்டுப்பாடு

சென்னை நகரில் வீட்டுக் கட்டுப்பாடு சட்டம், 30—9—55 வரை இப்போதுள்ள சட்டப்படி அமுலில் இருக்கும் என்று மராமத்து மந்திரி ராமநாதபுரம் ராஜா தெரிவித்திருக்கிறார்.

### ஆந்திராவில் உள்ள சாதனங்கள்

பிரிவினையின்போது ஆந்திரப் பகுதியில் தங்கிவிட்ட 'டிராக்டர்'கள், 'புல்டோஜர்'கள் முதலியவற்றை சென்னை அரசாங்கம் திரும்பப் பெற்றுக்கொள்வது பற்றி ஆந்திர அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடப்பதாக திரு. பக்தவத்சலம் கூறியுள்ளார்.

### ஷெட்யூல்ட் வகுப்பினர்

"தொழில் கல்லூரிகளில் ஷெட்யூல்ட் வகுப்பினருக்கென ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாதிருந்த இடங்கள், ஒதுக்காமல் பொதுவாக இருந்த இடங்களுடன் சேர்க்கப்பட்டு, சென்னை நகருக்குத் தரப்பட்டது," என்று மந்திரி இராமநாதபுரம் ராஜா கேள்வியொன்றுக்கு பதிலளித்திருக்கிறார்.

"பிற்பட்ட வகுப்பினருக்கு அந்த இடங்களை ஏன் ஒதுக்கவில்லை?" என்று கேட்கப்பட்டபோது, "பிற்பட்ட வகுப்பினருக்கு ஏற்கனவே 25 சத விகித இடங்கள் ஒதுக்கப்பட்டன," என்றும் மந்திரியார் கூறியிருக்கிறார்.

"25 சத விகிதத்திற்கு மேல் எத்தனை பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இடம் தரப்பட்டது?" எனக் கேட்கப்பட்ட நேரத்தில், மந்திரி சுப்ரமணியம், "மக்கள் தொகையில் 33 சதவிகிதம் இருக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கு 45 சத விகித இடம் கிடைத்துள்ளது; இதர வகுப்பினரும் இருக்கின்றனர் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்," என்று கூறியிருக்கிறார்.

### மலையாளம்:

"மலையாள மொழிப் பரீட்சை தேறுதவர்கள் மலையாளப் பகுதியில் தாசில்தார்களாக வேலை பார்ப்பது, நிர்வாகத்திற்குக் கஷ்டமாயுள்ளதா?" என்று கேட்கப்பட்டபோது, "தாசில்தார்களாக நியமிக்கப்படுகிறவர்கள், மலையாளப் பரீட்சை எதும் தேறியிருக்கத் தேவையில்லை," என்று ரெவினியூ மந்திரி மாணிக்கவேலர் தெரிவித்தார்.

ஒரு அங்கத்தினர், "பல மலையாளிகள், தமிழ் மாவட்டங்களில் தாசில்தார்களாக இல்லையா?" என்று கேட்டபோது, ரெவினியூ மந்திரி, "தமிழுக்கும் மலையாளத்திற்கும் அதிகமான வேறுபாடு ஒன்றும் இல்லையென்றும், ஒன்றைத் தெரிந்துள்ளவர்கள் மற்றொன்றை எளிதில் புரிந்துகொள்ள முடியும்," என்றும் அறிவித்திருக்கிறார்.

## வாபஸ் பெறுக!

"கொரிய ஒற்றுமைக்கு, இப்போது ஐ. நா. சபையில் நடைபெறும் பேச்சு வார்த்தைகளால் எதுவும் பலன் இருக்காது; கொரியாவில் இப்போதுள்ள, சீன, ஐ. நா. ஆகிய இரு தரப்புப் படைகளும் வாபஸ் பெறப்படவேண்டும்; ஆக்கிரமிப்பிருந்தால் ஒழிய எந்தத் தரப்புப் படையினரும் கொரியாவுக்குள் வரக்கூடாது," என்று, தென் கொரிய ஜனாதிபதி ரீ குறிப்பிட்டிருக்கிறார்.

## ஓராசிரியர் பள்ளிகள்

### பஞ்சாயத்துகளே திறக்கலாம்

பள்ளிகளில்லாத இடங்களில் பஞ்சாயத்து சபைகள் இருக்குமானால், அவைகள் படித்தவர்களின் வேலையின்மையைக் குறைக்கும் திட்டத்தின் கீழுள்ள ஓராசிரியர் பள்ளியமைப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற கல்வி இலாக்காத் தலைவர், ஸ்தல நிர்வாக சபைகளின் அதிகாரி ஆகியோரின் கூட்டு யோசனையை சர்க்கார் ஏற்றுக்கொண்டுவிட்டதாகத் தெரிகிறது.

## குருவின் பாதையில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நாணயமான கண்டனங்களை அனுமதிக்கும் முறையில் இப்பிரிவைத் திருத்த வேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இது போன்ற கண்டனங்களுக்கும் ஒரு எல்லை இருக்க வேண்டும். மற்றவர்களின் உணர்ச்சிகளை இழிவுபடுத்தாது, ஒருவர் தனது கருத்தைச் சொல்ல வேண்டும்.

உதாரணமாக இராமனையும் சீதையையும், ஆண்—பெண் கற்பிற்கு வழிகாட்டிகளாகப் பலர் ஏற்றுக் கொள்கின்றனர். இந்த நம்பிக்கையில், ஏராளமானவர்கள் அவர்களைத் தொழுகிறார்கள். இவ்விஷயத்தில் தனது மாற்றுக் கருத்தைச் சொல்ல வேண்டுமென்பதற்காக இது போன்றவர்களை இழிவுபடுத்துவதா?

சோவியத் ரஷ்யாவில்கூட, 'கடவுள் நம்பிக்கை அவர்களுக்கு இல்லை' என்றாலும், கடவுளை நிந்திப்பதை அவர்கள் அனுமதிப்பது இல்லையாம்.

கருத்தைச் சொல்லுவது என்பது ஒன்று; இழிவாகப் பேசுவது என்பது வேறு. நமது முன்னோர்கள், நமது இலக்கியங்கள், நமது கவிஞர்கள் அளித்துப் போயுள்ள பண்பாடுகளை இழிவுபடுத்துவதென்பது, நமது சுயமரியாதைக்கு மதிப்பளிப்பதாகாது; மாறாக நம்மை இழிநிலைக்கு இழுத்துச் செல்லுகின்றன.

வேண்டுமென்றால், இப்படிப்பட்டவர்கள், இவர்களுக்குச் சுதந்திர மளிக்கும் வேறு எந்த வெளிநாட்டிற்காவது போகட்டும்; ஆனால் அங்கே இந்த நிலை இல்லாததை அவர்கள் காண்பார்கள். அங்கெல்லாம் மக்கள், தங்கள் பழமையைப் போற்றுகிறார்கள்; கடந்த காலம் அளித்த பண்பாட்டைப் போற்றுகிறார்கள். (இங்கேயும்) மக்கள் அதுபோன்ற நிலையை வளர்க்கவிட்டால், அவர்கள் சுயமரியாதைத் தன்மையைப் பெற முடியாது.

கருத்தைச் சொல்வதற்கும், இழிவாகப் பேசுவதற்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்தால் தொல்லை எதும் இராது. ஆனால் துரதிருஷ்டவசமாக மற்றவர்களின் உணர்ச்சியைப் புண்படுத்தி, இழிவாகப் பேசினால்தான் தங்கள் கருத்தைச் சொல்ல முடியுமென்று சிலர் நினைக்கிறார்கள்."

(சென்ற சில நாட்களுக்கு முன்னர் முன்னாள் முதலமைச்சர் இராஜகோபாலாச்சாரியார், குஜராத்திகள் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், "மதத்தின்மீது நம்பிக்கை இல்லாதவர்கள் இந்த நாட்டைவிட்டு வெளியே போய்விடலாம்" என்று பேசியது இங்கு குறிப்பிடத்தக்கது.)

## கழகக் கூட்டங்கள்

★

**இராமநாதபுரம் (முகவை)**
அரண்மனை முன்பு
12—12—54 மாலை 6½ மணிக்கு
தலைவர்: முகவை சீனிமுகம்மது
பேசுபவர்:
என். வி. நடராசன்

★

**திருச்சி**
தாராநல்லூர் தி. மு. கழக (கிளை) ஆண்டு விழா
தேவர் மன்றத்தில்
12—12—54 காலை 9 மணிக்கு
தலைவர்: எஸ். நெடுமாறன்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
அலிசேக் மன்சூர்
சிற்றுளி சுப்ரமணியம்
ஏ. பி. தர்மலிங்கம்
எம். எஸ். மணி

அன்று மாலை 6 மணிக்கு, தாராநல்லூர் மைதானத்தில் பொதுக் கூட்டமும் நடைபெறும்.

★

**செங்கோட்டை (திரு-கொச்சி)**
12—12—54 ஞாயிறு மாலை
பேசுபவர்:
கே. ஏ. கலையழகன்

★

**புளியங்கண்ணு**
12—12—54 ஞாயிறு மாலை
பேசுவோர்:
மணிஎழிலன்
க. அறிவுதாசன்

### 43வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு

12—12—54 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு மேற்படி கழகப் பணிமனையில் பொது உறுப்பினர்களின் கூட்டம் நடைபெறும். பொங்கல் விழா, 4-ம் ஆண்டு விழா, மற்றும் கழக ஆக்க வேலைகள் பற்றி பரிசீலித்து முடிவு செய்யப்படும்.

### புதுவை வட்டார மீனவர் ஐக்கிய முன்னணி ஆரம்பக் கூட்டம்

12—12—54 பகல் 2 மணிக்கு புதுவை பெரியகாலாபட்டியில் புதுவை வட்டார மீனவர் ஐக்கிய முன்னணியின் ஆரம்பக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் எஸ். சோமசுந்தரம், ஜே. சந்திரசேகரன், ஏ. கோவிந்தசாமி (நாடார்), என். ஜீவரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வர்.

### சொற் பயிற்சிக் கூட்டங்கள்

11-12-54 மாலை 6-30 மணிக்கு, சென்னை 1-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் ஏ. கே. முத்தரசு தலைமையில் 'நாடும்-நாமும்' எனும் பொருள் பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

12-12-54 காலை 9 மணிக்கு, சென்னை 44-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில் (2, அரங்கநாதபுரம் தெரு, மயிலை) தோழர் ஏ. ஆறுமுகம் தலைமையில் 'நமது வரலாறு' எனும் பொருள் பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

### கோவை அழகிரி நினைவுப் படிப்பக 3-வது ஆண்டு விழா

12-12-54 ஞாயிறு மாலை 6 மணிக்கு கோவை, ஒய். எம். சி. ஏ. திடலில் நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், எம். பி. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ., எஸ். ஏ. ராசமாணிக்கம் ஆகியோர் பேசுவர். நன்கொடை அணா 8, 4.

### வள்ளுவர் மன்ற 3-வது ஆண்டு விழா

12-12-54 பிற்பகல் 3 மணி முதல், செல்லிக்குப்பம் டேனிஷ் மிஷின் உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், திருக்குறளார் வீ. முனுசாமி, எம்.பி., என். வரதப்பன் ஆகியோர் பேசுவர். இரவு 8 மணியளவில், தோழர் எம். எஸ். ஜானகிராம் தலைமையில், தோழியர் எம். ஜெயலட்சுமி குழுவினரின் இன்னிசை நடைபெறும்.

கர்னூல், டிச. 9—

ஆந்திராவில் திரு. பிரகாசம் மந்திரி சபையை எதிர்த்துக் கவிழ்த்தவர்களில் ஒருவரான திரு. சங்கர ரெட்டி காங்கிரஸ் சார்பில் தன்னை தேர்ந்தெடுத்தாலும் எடுக்காவிட்டாலும் தாம் வரும் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறார்.


# 'திராவிட நாடு'

## பொங்கல் மலர்

சுவையும் பயனும் மிகுந்தது
காரணம் காட்டுகிறோம்!

படித்து ரசித்திட! சிந்தனை செழித்திட! இதயம் களித்திட!
**கருத்தோவியங்கள்** ஏராளம்!

**எந்த ஆண்டும் இல்லாத எழில்!**
**எண்ணத்தில் வண்ணக் குவியல்!**

பொங்கற்புதுநாளுக்குப் பொருத்தமான விருந்து!

உழவர் வாழ வழி காண உயிரை ஈந்த
**உடன் பிறந்தார் இருவர்!**
—பண்டை ரோம் நாட்டு வரலாற்றிலே ஓர் உருக்கமான சம்பவம்

மூட நம்பிக்கை கப்பிக் கொண்டிருந்த போது காட்சி தந்த
**குமாரி சூர்யா!**
—ஜப்பான் நாட்டு மனவள விளக்கக் காதை!

ஆராய்ச்சித் திறனை விளக்கிடும்
**பழமும் பலனும்**
—இங்கிலாந்து நாட்டு அறிவியக்க வரலாறு

பக்தர்களின் போக்கை விளக்கும்
**நங்கை நகைத்தாள்!**

ஊராள்வோர் போக்கை விளக்க
**அறுவடை**

சீமான்களுக்குபக்க மேளம் கொட்டும் போக்கை விளக்க
**பல்லிளிக்கும் பரப்பிரம்மம்**

**தேவ காதைதானு கம்பன் காவியம்**
என்பதை விளக்க
**கம்ப ரசம்**

இவை
**அண்ணாதுரை**
அளிக்கும் கருத்தோவியங்கள்

★

**திருமுகம்**

நமது பணி—அறப்போரின்
மாண்பு—மன வளர்ச்சி—
இவை பற்றி விளக்கமளித்து இயக்கத்தில் ஈடுபட வருமாறு இளைஞர் உலகுக்கு விடப்படும் அன்பழைப்பு

★

**இந்த ஆண்டு பொங்கல் மலர்**
**இல்லந்தோறும் இருக்க வேண்டிய**
**எழிலேடு!**

★

விவரம் அறிய: — 'திராவிட நாடு,' — காஞ்சீபுரம்


## சுயாட்சி!

ஐ. நா. பொதுச் சபையின் டிரஸ்டி குழுவில் பேசிய திரு. வி. கெ. கிருஷ்ணமேனன், பிரிட்டன், ஆப்பிரிக்காவில் உள்ள கோல்டு கோஸ்டு, டோகோலண்ட் ஆகிய பகுதிகளில் சுயாட்சிப் பிரகடனம் செய்திருப்பதைப் பாராட்டினார்.

ஆப்பிரிக்கப் பகுதிகளான அந்த இரண்டு இடங்களிலும் இப்போது சுயாட்சி அமைக்கப்படுவதைப் போலவே ஆப்பிரிக்காவின் இதரப் பகுதிகளிலும் குறிப்பாக பிரெஞ்சுப் பிடியிலிருக்கும் டொகோலண்டிலும் சுயாட்சி அமைய முடியுமென தாம் நம்புவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

### எண்ணிக்கை பெருகிறது!

நாகர்கோவில், டிச. 9—

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசின் செயற்குழு உறுப்பினரான தோழர் பி. எஸ். மணி, திருத்தமிழக வழக்கு சம்மந்தமாக இன்று கைது செய்யப்பட்டார் எனத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ, அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,